# தமிழகத்தின் தாயுமானவர் தளபதி!



தமிழகத்தின்
தாயுமானவர்...
வளர்ச்சிக்குத்
தந்தையானவர்....

வகை வகையாகத்
திட்டங்கள் தந்த
திராவிட வகையறா....

நலிவுற்றோருக்கு
நல்வழி காட்டும்
நம்பகத் தலைவர்....

இமைக்கும் நொடி கூட
இனத்தின் முன்னேற்றம்
பற்றி சிந்திக்கும் மனம்....

துறைகள் அனைத்தையும்
தூக்கி நிறுத்தும்
தூய நெஞ்சம்....

போர்க்குணம்
மிக்க
புன்னகைத் தலைமை....

தாளடி சம்பா
தொடங்கி
கீழடி வரை
தொலை நோக்குப் பார்வை....

காலை உணவுத் திட்டம்
தந்த
கழக சூரியன்...

கொள்கை எதிரிகளுக்கு
ஆபத்தானவர்...
எட்டு கோடி தமிழர்க்கு
ஆபத்பாந்தவர்...

அணி அணியாய்
வந்து பெருகும்
ஆதரவு
தீர்க்கதரிசனம்
தரும் பேரறிவு....

அயல் மாநிலங்களுக்கு
முதல்வர்
முன்னுதாரணம்
பொருளாதார வளர்ச்சி
எனும் எண்ணுதாரணம்!

கோயில்கள்
பள்ளிகளின்
பொற்காலம்
தற்காலம்....

விடியல் பயணத்தில்
மகளிர் மட்டும்
அவர்கள் தரும்
பாராட்டுகளோ
இமயம் முட்டும்...

இலவச மடிக்கணினி
மாணவர்
பயனுறும்
தொழில்நுட்பப் புரட்சி...

இயக்கம் காக்கும்
இணையற்ற தலைவர்
இணையம் முழுதும்
குவியும் பாராட்டு !

இருவண்ணக்கொடி
பூர்வீகம்
செயல்பாடுகளில்
புயல்வேகம்....

மகளிர் உரிமைத் தொகை
உன்னதம்
கழக ஆட்சியே
தொடர சம்மதம்...

சனாதன எதிர்ப்பு
சந்ததியாக
இனமான
இளந்தலைவரை
இயக்கத்திற்குத் தந்த
ஈடில்லா
தலைவர் வாழ்க!

வெற்று வேட்டுகள்
வெளியேறி ஓடும்
கழகமே மீண்டும்
வெற்றிவாகை சூடும் !

முதல்வர் பிறந்தநாளில்
வாழ்த்தி
சபதமேற்போம்
வெற்றி பெற்று
அரியணை ஏற்போம்!



**சேப்பாக்கம்**
**எஸ்.எச். ரஹ்மத்துல்லாஹ்**
சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர்
சென்னை மேற்கு மாவட்டம்.





சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ”ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் ”தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. தலைமையில் பகுதி கழக செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், டாக்டர் .அரிமா நாகை சந்திரபாபு, ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., பாலவாக்கம் க.சோமு, மு.மனோகரன், த.விஸ்வநாதன், எம். கே.ஏழுமலை, தா,பஷீர், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், புனித தோமையார் மலை ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜன், மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள்,மாவட்ட அணைகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை

## நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

### தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!



சென்னை, பிப். 28-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 73வது பிறந்தநாளான மார்ச் 1 அன்று தொழிலாளர்கள் அனைவரும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்கள் வரிசையில் நான்காம் தலைமுறையாக இந்தியாவிற்கே முன்னோடியாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் மார்ச்1 அன்று. கழகத் தலைவர் அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியில் தொழிலாளர்களுக்கு ஏராளமான ஊதிய உயர்வு ஒப்பந்தங்கள், பணப் பயன்கள் வழங்கி சிறப்பான தொரு ஆட்சியை நடத்தி வருகிறார்.

கழகத் தலைவர் அவர்களின் ஆட்சியில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 12 சதவிகித ஊதிய உயர்வுடன் பே மேட்ரிக்ஸ் மற்றும் தனித் தனி ஊதியம் விகிதம் வழங்கியுள்ளார். மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 6 சதவிகித ஊதிய உயர்வு, 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு 3 சதவிகித வெயிட்டேஜ், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் பருவ கால தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கி சாதனை படைத்துள்ளார்.

மேலும் கூட்டுறவு நூற்பாலை, கோஆப் டெக்ஸ் தொழிலாளர்கள், தேயிலை, ஆவின், ரப்பர், சர்க்கரை ஆலை ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியதுடன், அங்கன்வாடி பணியாளர்களுக்கு பணிக்கொடை உயர்வு, ஒய்வூதியம் உயர்வு, குடும்ப ஒய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளைப் படைத்து தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கை அரணாக என்றென்றும் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார். மார்ச் 2026 வரை ஓய்வு பெறும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஓய்வு கால பணப் பயனுக்காக ரூ.2446.46 கோடி ஒதுக்கி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இவ்வளவு பெரிய மகத்தான சாதனை புரிந்து 5 ஆண்டு காலம் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் நாயகன் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை குக்கிராமம் முதல் பட்டி தொட்டியெங்கும் கழக அரசின் சாதனைகளை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு, அவரது பிறந்தநாளன்று ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், அறுவை உணவு வழங்கியும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென அனைத்து தொழிலாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறுஅவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் பிறந்தநாள் விழா – ஜி.துக்காராம் பங்கேற்பு!

## மாதவரம் 30 ‘அ’ வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

### வட்டச் செயலாளர் டி.சுந்தரம் வேண்டுகோள்!

சென்னை, பிப். 28-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்ட கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு விநாயகபுரம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி கழக கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நாளை (01.03.2026) காலை 8 மணி அளவில் நடைபெற உள்ளது.

விழாவிற்கு வட்டக் கழகத்தின் தலைவர் இ.ராமன் தலைமையில் நடைபெறுகிறது.

அவ்வமயம் பகல் ஒரு மணி அளவில் விநாயகபுரம் மனநலம் ஒன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு கேக் வெட்டி கொண்டாட இருப்பதால் நமது வட்டக் கழகத்தின் சார்பில் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மருத்துவர் அணி தலைவர் ஜி. பார்த்தசாரதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.லட்சுமி காந்தன், எஸ். பி.கண்ணன், பி.வி. ராஜு, சி.பரமேஸ்வரி, அபிப் ரஹ்மான், எஸ்.என். ராஜு, கே.நரேந்திரன், ஏ.வி.முருகன், எம்.சீனிவாசன், விக்னேஷ், வெற்றிவேல், பிஎஸ்என்எல் குமார், காஞ்சி சண்முகம், சக்கரபாணி, எல்.சண்முகம், எஸ்.அஜித், கவிப்பிரியா, டிவிஎஸ் கோபி, கௌதம் செண்பகராஜ், பிஎஸ்என்எல் குமார், வி.பாஸ்கர் மற்றும் வட்டக் கழக பகுதி சார்பு மன்ற துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கல்வி மேலாண்மை குழு உறுப்பினர் சுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இந்தியாவின் கோபுரக் கலசம் திராவிட மாடல்!



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்தமிழ்நாட்டின்தலைசிறந்த முதல்வராய் தளபதியின் ஆட்சி.

2021-ல் தொடங்கிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியால் மக்களுக்கான வெற்றிப் பயணம் 2026-ல் மட்டுமல்ல.

மீண்டும், மீண்டும் வெல்லும். 2026-ல் கூட எதிரிகள் எழ முடியாது. தி.மு.க. திராவிட மாடல் ஆட்சியில் ஒருநாளும் தமிழ்நாடு தலைகுனியாது.

ஒவ்வொரு வீட்டிலும் இல்லத்தரசிகள் இதயத்தில் நீங்காத உடன்பிறப்பாய் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாட்டில் வாழும் குடும்ப தலைவர் உள்ளிட்ட சகோதர, சகோதரிகள், பிள்ளைகள், பேரன், பேத்திகள் ஒன்றிணைந்து போற்றும் ஒரே ஒப்பற்ற தலைவர் மு.க.ஸ்டாலின்.

தமிழின மக்களின் நாடி நரம்புகளில் ஊடுருவிய குருதியாய், உடன்பிறப்பாய் வழிகாட்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

ஒவ்வொரு குடும்பமும் தி.மு.க. குடும்பமென அரசனாய் மட்டுமின்றி தாயுமானவராய்த் திகழ்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

வாழ்வளிக்கும் வள்ளலாய் மக்களின் மனதிலே நிரந்தரத் தலைவனாய் முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

கொள்கையற்ற எதிரிகளை கூப்பாடு போடும் இன பகைவர்களை நிலை குலைய ராஜதந்திர உத்தி வகுத்து மக்களை காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

பாசிச சங்கிகளின் சூழ்ச்சிகளை, அடிமைகளின் கதறல்களைத் துகள்களாக்கிய திராவிட மாடல் தலைவன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின்.

ஆட்சி அமைத்த நாள் முதல் நாளொரு நயமிகு அறிவிப்புகளை நாள்தோறும் நல்கிடும் இந்தியாவின் No.1 முதல்வர் மு.க.ஸ்டாலின்.

நினைவு வருதே! நினைவு வருதே! வேதனைகளிலும் சாதனை செய்த முத்தமிழறிஞர் கலைஞரின் குரல் ஒலிக்கிறதே. கலைஞர் கனவுகள் நனவாகிறதே.

நம்மால் மறக்க முடியுமா? “தமிழர்களே! தமிழர்களே! என்னை தூக்கி கடலிலே போட்டாலும் கட்டுமரமாக மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்” என்ற நமது இதயம் நிறைந்து வாழும் தலைவர் கலைஞர் கூற்றை நிரூபித்த வியத்தகு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

22 ஆம் நூற்றாண்டுக்கு தி.மு.க.வை இளமையோடு.. வலிமையோடு தலைமையேற்று வழிநடத்த புறப்பட்ட நாளைய திராவிட இனத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய் துணை முதல்வர் உதயநிதி!..

உலக தமிழர்களின் தலைவனாக தமிழுலகின் கோடிக் கணக்கானோர் இதயத்தில் இந்தியாவின் கோபுரக் கலசமாக குடிகொண்ட மகத்தான மாபெரும் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின். எனின் - அது மிகையல்ல.

“சொன்னதைச் செய்தார்
சொல்லாததையும் செய்து காட்டி
சர்க்கரைப் பந்தலில்
தேன் மாரிப் பொழிந்ததுபோல்”
மகளிர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்கள்.

தாய்க்குலத்தின் பேராதரவு. தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களிலும் மட்டற்ற மகிழ்ச்சி.

முதல்வரின் சமூக நீதி பார்வை. பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்து மகளிருக்கு மங்களகரமான நாளாம் வெள்ளிக்கிழமை அதிகாலை மகாலஷ்மி (ரூ.5000) வீட்டிற்குள் நுழைந்த செய்தியைக் கண்டு திகைத்துப் போயினர்.

முதல்வர் அவர்களின் மிக துணிச்சலான நடவடிக்கை எடுத்ததன் மூலம் 1 கோடியே 31 இலட்சம் மகளிர்களுக்கு ரூ.6,550.00 கோடியை மகளிரின் வங்கி கணக்கில் செலுத்தி, பலாச்சுளையில் தேனைக் குழைத்து தந்த திராவிட மாடல் ஆட்சி மகளிர்க்கானது என்று நிரூபிக்கப்பட்டது.

இன்ப அதிர்ச்சியாக ரூ.5,000 கிடைத்தது கண்டு மகளிர் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

இச்செய்தியைப் பல முன்னணி நாளேடுகளின் தலைப்புச் செய்தியாக “தி இந்து, டெக்கான் கிரானிகல், டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினத்தந்தி, தினகரன், தினமணி, தினமலர் மற்றும் மாலை பத்திரிகைகளும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் கொண்டாடி மகிழ்ந்தன.

‘கலைஞர் உரிமைத் தொகை’ ரூ.5000/- பெற்ற ஏழை, எளிய இல்லத்தரசிகள் குறிப்பாக சென்னையைச் சேர்ந்த திருவொற்றியூர் காமாட்சி, பெரம்பூர் இலட்சுமி மற்றும் இராதா, குரோம்பேட்டை லலிதா பாபு, மேற்கு தாம்பரம் சபீரா ஆஷிக், செம்பாக்கம் சுஜாதா ரமேஷ், அம்பத்தூர் மோகனா, தரமணி மாலா, துரைப்பாக்கம் குளசு முத்துச்செல்வி, மாதவரம் சுமதி, விஜயலட்சுமி, திருவொற்றியூர், நந்தினி, டி.செல்வி, ஆலந்தூர் மாயா, ஆதம்பாக்கம் பவானி, தண்டையார்பேட்டை சாந்தி, அபிராமி, பழைய வண்ணாரப்பேட்டை கோட்டீஸ்வரி, செம்மஞ்சேரி சாரதா இப்படியாக பல்லாயிரக்கணக்கானோர் முதல்வருக்கு நன்றி கூறி மகிழ்ந்தனர். வரும் சட்டமன்றத் தேர்தலில் “மீண்டும் முதல்வராக தமிழ்நாடு மக்களாகிய நாங்கள் தி.மு.க.விற்கு வாக்களிப்போம். தி.மு.க. வெல்லும் என சூளுரைத்தனர்.

தி.மு.க.வின் எதிரிகளை நிச்சயம் வேரறுப்போம் என்று மகளிர் உணர்ச்சிப் பொங்கக் கூறியது காண்பவர் நெஞ்சையும் நெகிழ வைத்தது.

இந்தியாவின் எந்த பகுதியில் வாழும் பெண்களாக இருந்தாலும் தமிழ்நாடு வருகை புரியும்போதெல்லாம் அவர்களுக்கு கிடைக்கும் மகிழ்ச்சி மரியாதை பாதுகாப்பு சமஉரிமை கிடைப்பது கண்டு மாண்புமிகு முதல்வரை புகழ்ந்து அகமகிழ்வோடு பாராட்டுவதை சமூக வலைதளங்கள் மூலம் காண முடிகிறது. இந்தக் காட்சி நாளை இந்தியாவின் அதிகார விளிம்பில் தமிழ்நாட்டை அமரச் செய்யும் திராவிட மாடல் இந்தியாவை ஆளும்.

ரூ.5000 வரவு வைத்தது மட்டுமின்றி 2.0 ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை உயர்த்தப்பட்டு மாதந்தோறும் (2000) ரூபாய் இரண்டாயிரம் வழங்கப்படும் என முதல்வர் வாக்குறுதி அளித்தது.

மகளிருக்கு கிடைக்கும் உரிமைத் தொகையை முழுவதுமாக முடக்க நினைத்த பாசிஸ சக்திகளின் சதியை சூழ்ச்சியை ஒரு சில மணிநேரங்களிலே கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முறியடித்தது மிகவும் வியக்கத்தக்கது.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு ஆக பெரும் செயல்களை கருணைமிகு உள்ளத்தோடு வாரி வழங்கிய முதலமைச்சர் அவர்களை வெல்லும் தமிழ்ப் பெண்கள் மட்டுமின்றி, மாணவர்கள், இளைஞர்கள், பேராதரவோடும் கழகத்தின் செயல் வீரர்கள் தொண்டர்களின் தியாக உழைப்போடு மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவார் என்பது உறுதி.

நாடும், மக்களும் அரியணையை அவரிடமே வழங்குவர். நம்மை பாசிஸ சக்திகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள என்றும் வாக்களிப்போம் உதயசூரியனுக்கு.

“சொல்வோம் ஒன்றாக..
வெல்வோம் 200
படைப்போம் வரலாறு”
வாழ்க திராவிடம்!
வெல்க தி.மு.க.!



**அரிமா, நாகை, சந்திரபாபு**
பொருளாளர்
தலைமை கழக இலக்கிய அணி தி.மு.க.

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

### மாநிலப் பொதுச் செயலாளர் ந.சண்முகசுந்தரம் அறிக்கை!

சென்னை, பிப்.28-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பாகமாநில பொதுச்செயலாளர் ந.சண்முகசுந்தரம் அறிக்கை வருமாறு:-

அகில இந்திய தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு. சண்முகம், அகில இந்திய தொ.மு.ச. தலைவர் கி.நடராசன் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 1 தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் காலை 8 மணி அளவில் மேளதாளங்களுடன் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் அன்று நாள் முழுவதும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

வருகிற (02.03.2026 திங்கட்கிழமை) காலை 8 மணி அளவில் தாம்பரம் பெரும்பாக்கத்தில் உள்ள ட்ரீம் கிட்ஸ் சிறுவர் காப்பகத்தில் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

4.03.2026 கோட்டம் நான்கு மற்றும் எஸ்டேட் அலுவலகம் 4 கோட்டம் 07 மற்றும் எஸ்டேட் அலுவலகம் 07 மதியம் அசைவ உணவு வழங்கப்படுகிறது.

04.03.2026 வியாழக்கிழமை காலை 8.00. மணியளவில் ஆந்திர மகளிர் சபாவில் உள்ள மனநல குன்றிய சிறார்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

எனவே அனைத்து நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் நிகழ்ச்சியில் பங்கு பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தாம்பரம் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவித்த வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை கிழக்கு தாம்பரத்தில் அமைந்துள்ள பாத்திமா சமுதாய நல கூட்டத்தில் நடைபெற்றது. தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையிலும், மாநகர மகளிரணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் எம்.சி. வரவேற்புரையிலும்,மாநகர மேயர்.க.வசந்தகுமாரி,தாம்பரம் தொகுதியின் தேர்தல் பார்வையாளர் பருதி இளம் சுருதி எம்.சி,மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன்,பகுதி செயலாளர் செம்பாக்கம் இரா.சுரேஷ்,மருத்துவர் கிருத்திகா தேவி மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் என 500 க்கும் மேற்பட்ட மகளிரணியினர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா விருந்து அளித்தார்.